மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 191/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மணி | நாள் | 28.02.2024 |
| தகப்பனார் பெயர் | சின்னண்ண கவுண்டர் | | |

**1, 2 பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

22) நான் நிரந்தரமாக கூழையூரில் வசித்து வருகிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் எனது மகன் இருந்து வருகிறார். நான் கூழையூரில் உள்ள நிலத்தில் விவசாயம் செய்து வருவதால், தாவா சொத்திலுள்ள வீட்டில் வந்து சாப்பிட்டுவிட்டு, மீண்டும் கூழையூருக்கு சென்று விடுவேன்.

23) நான் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் ஒரு செக்குபந்தியாகவே 20 அடி அகல பாதைக்கும் தெற்கு எனவும், வா.சா.ஆ.2 கிரய பத்திரத்திலேயே மேற்படி பாதை குறித்து குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும், சரிதான். ஆனால், அது நடந்து போகும் அளவிற்கான பாதைதான். அதில் கனரக வாகனங்கள் எதுவும் செல்ல இயலாது. தாவா சொத்திலுள்ள வீட்டின் கீழ் பகுதியின் என் மகன் பலசரக்கு குடோன் வைத்துள்ளார் என்றாலும், அதிலுள்ள பொருட்களை லாரி மூலமாக விநியோகம் செய்து வருகிறார் என்றாலும், சரிதான்.

24) 1, 2 பிரதிவாதிகள் அவர்கள் வைத்துள்ள குடோனுக்கு பஞ்சாயத்திற்கு வரி செலுத்தி வருகிறார்கள் என்றாலும், அது குறித்து எனக்கும் தெரியும் என்றாலும், சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி பிரதிவாதிகள் வணிக நோக்கத்துடன் குடோன் அமைக்க சட்டத்திற்கு புறம்பாக முயற்சிப்பதாக நான் சொல்லியுள்ளது, தவறானது என்றால், சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகளின் நிலத்திலுள்ள குடோனில் உணவு பொருட்கள் விநியோகம் செய்யும் சேவை செய்து வருகிறார்கள் என்றாலும், அதை கெடுக்கும் கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

25) என்னுடைய வீட்டிலிருந்து கிழபுறமாக 1, 2 பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால், சரிதான். என்னுடைய வீட்டிலிருந்து மேற்குபுறமாக பிரதான சாலை உள்ளது என்றால், சரிதான். அவ்வாறுள்ள நிலையில், கிழபுறமுள்ள வாதிகளின் நிலத்தை தாண்டி நான் செல்லவேண்டிய அவசியமே எழவில்லை என்றாலும், 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்யும் நோக்கில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் என் வீட்டை விலைக்கு கேட்டனரா என்றால், இல்லை.

26) 1, 2 பிரதிவாதிகள் என் வீட்டை விலைக்கு கேட்காத நிலையில் பொய்யாக ஒரு சங்கதியை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

(3, 4 பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.